22nd November 1963]

### வெளிநாடு சென்ற மாணவர்கள்

* 456 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு தொழில் நுணுக்கப் பயிற்சி பெற எத்தனை மாணவர்கள் அனுப்பப்பட்டனர் ?

(இ) எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு எந்தெந்த நாட்டிற்கு அனுப்பப்பட்டனர் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை ஒருவருமில்லை. பிற மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் இந்த சர்க்காரிடம் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Panchayat Union Council Employees*

* 457 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that service conditions and the rules have not yet been framed in respect of Panchayat Union Council employees; and

(*b*) if so, the reasons for the delay?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களில் பணியாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் ஊழிய நிபந்தனைகளை முறைப்படுத்த, 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் இருபத்தெட்டு விதித் தொகுப்புகளை வெளியிட வேண்டியிருக்கிறது. இவற்றில் 7 விதித் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மசோதா விதித் தொகுப்பு ஒன்று செயின் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் வெளியாகியுள்ளது. அது நாளடைவில் உறுதி செய்யப்படும். ஆறு விதித் தொகுப்புகள், லோகல் பண்டு அக்கவுண்ட்ஸ் எக்சாமினருக்கும், மருத்துவத் துறை டைரக்டருக்கும் அவர்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் படி அனுப்பப்பட்டுள்ளன. ஒன்பது விதித் தொகுப்புகள் செகரட்டேரியட்டிலுள்ள மற்றத்துறைகளைக் கலந்து கவனமாக ஆராயப்பட்டு வருகின்றன. எஞ்சிய விதிகள் கவனமாக ஆராயப் பட்டு, நாளடைவில் வெளியிடப்படும். இதற்கிடையில், புதிய விதிகள் இயற்றப்படாத பதவிகளுக்கு 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தின் கீழ் அந்தந்தப் பதவிகளுக்கென வெளியாகியுள்ள ஊழிய விதிகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் களில் பணியாற்றும் நபர்களுக்கும் பொருந்தும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : விதிகள் இயற்றப்படாமல் இருப்பதால் அவர்களுடைய வருஷாந்திர உயர்வும் மற்றவையும் பாதிக்கப்படுமா ?

[22nd November 1963

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

**திரு. செ. மாதவன் :** அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு செர்விஸ் புக்ஸ் சப்ளை செய்யாத காரணத்தால்தான் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது என்பது உண்மையா? உடனடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் எல்லா அலுவலர்களுக்கும் செர்விஸ் புக் 'ஓப்பன்' பண்ண சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

### கால்நடை மருத்துவ மனைகள்

*458 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகள் எந்த அடிப்படையில் திறக்கப்படுகின்றன ?

(இ) 1963-ல் திறக்கப்படவிருக்கும் மருத்துவமனைகள் எத்தனை ஜில்லாவாரியாக ?

THE HON. SRI P. KAKKAN : (a) Veterinary Dispensaries are being opened in Taluk and Block Headquarters. In other places, they are opened depending upon the local demand, cattle population, disease position, availability of land, buildings, staff etc., preference being given to Panchayat Unions which have no dispensary within a radius of 5 miles and where the Unions come forward to donate lands, construct buildings or make any other contribution.

(b) Thirty dispensaries and the district-wise particulars are :—

South Arcot District—4.
North Arcot District—2.
Thanjavur District—1.
Madurai District—4.
Ramanathapuram District—3.
Tirunelveli District—5.
Tiruchirappalli District—3.
Salem District—4.
Coimbatore District—4.

### சிமெண்டு ரோடுகள் (இராமநாதபுரம் மாவட்டம்)

*459 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் ரோடுகள் போடப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமென்றால், எத்தனை மைல்கள் ?